கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்

# ஊடக வெளியீடு

31 ஜூலை 2024

**கொழும்பு:**

## ACCA மற்றும் CSE இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்

சான்றளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர்கள் சங்கம் (ACCA) மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (கொ.ப.ப.), இலங்கையில் நிதியியல் அறிவு மற்றும் தொழில்சார் அபிவிருத்தியினை மேம்படுத்தவது நோக்கி ஒரு பங்குடைமையினை நிறுவுவதற்காக சமீபத்தில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கைச்சாத்திட்டது.

இந்த கூட்டுமுயற்சியானது CSE இன் கிளைகளூடாக ஒரு மூலதனச் சந்தை தொகுதியினை ஏற்படுத்தும் ACCA கல்வி பாடக்கோப்பினை வழங்குவதற்கு முனைகின்றது. இது ACCA மற்றும் CSE உடன் கூட்டு நாமமிடப்பட்ட கல்வி பாடக்கோப்பாகும் மற்றும் ACCA இன் தொழில்சார் அபிவிருத்தி மற்றும் கற்றல் வளங்களுக்கான அணுக்கத்தினை வழங்கும். இந்த பங்குடைமையானது பிராந்திய மட்டங்களில் கூட்டு சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளூடாக கணக்கியல் மற்றும் நிதியியல் ஆகிய துறைகளில் மாணவர்கள் அவர்களது கல்வியினைத் தொடர்ந்து தொழில்வாழ்வினை மேம்படுத்தவதற்கான புதிய வழிகளை ஆராய்ந்து உருவாக்கும். இந்த முன்னெடுப்பானது கொள்திறன் கட்டியெழுப்பல் முன்னெடுப்புகளூடாக மாணவர்களின் தொழில்வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு முனைகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தமானது ACCA இன் தெற்காசியத் தலைமை, திருமதி. நிலூஷா ரணசிங்க மற்றும் CSE இன் பி.நி.அ. திரு. ரஜீவ பண்டாரநாயக்க அவர்களால் கைச்சாத்திடப்பட்டது. கைச்சாத்திடல் வைபவத்தில், திருமதி. ருச்சேரா ஜயவர்தன, ACCA இன் வணிக அபிவிருத்தி முகாமையாளர்; திருமதி. டிலானி பெரேரா, ACCA இன் வணிக உறவுகள் முகாமையாளர்; திரு. நிரோஷன் விஜேசுந்தர, சிரேஷ்ட துணைத் தலைவர் - சந்தைப்படுத்தல், கொ.ப.ப.; திருமதி. உத்பலா திசாநாயக்க, சட்ட அதிகாரி – சட்டம் மற்றும் வலியுறுத்தல், கொ.ப.ப.; மற்றும் திருமதி. லங்கேசா மொல்லிகொட, சிரேஷ்ட துணைத் தலைவர் - சட்டம், வலியுறுத்தல் மற்றும் இணக்கப்பாடு, CSE கலந்துகொண்டார்கள்.

பங்குடைமை குறித்து உரையாற்றும்போது, CSE இன் பி.நி.அ. திரு. ரஜீவ பண்டாரநாயக்க அவர்கள் பின்வருமாறு கூறினார், “நிதியியல் அறிவினை மேம்படுத்துதல் நிதியியல் சந்தைகளில் ஒரு நேரடியான தாக்கத்தைக் கொண்டுள்ளது. மூலதனச் சந்தைக்குள் நுழைவதற்கான தயக்கம் அனேகமாக புரிந்துணர்வு இல்லாமையினால் எழுகின்றது. இதுபோன்ற பங்குடைமைகள் மதிப்புமிக்க தகவல்கள் மற்றும் அறிவினை வழங்குவதில் முக்கியமானது என்பதுடன், ஆர்வமுள்ளோருக்கு

உடனடியாக கிடைக்கக்கூடியதாக்குகின்றது. நாம் இந்த முன்னெடுப்பினை வரவேற்பதுடன், இது எமது இரண்டு நிறுவனங்களுக்கும் நாம் சேவையாற்றும் துறைகளுக்கும் நன்மை பயக்கின்றது.''

ACCA இன் தெற்காசியத் தலைவர் திருமதி. நிலூஷா ரணசிங்க, இவ்வாறு கூறினார், ''ACCA இல் கூட்டுமுயற்சியே முன்னேற்றத்திற்கான மூலக்கல்லாகும் என நாம் நம்புகின்றோம். CSE உடனான இந்த பங்குடைமையானது, தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு துணையளிப்பதற்கும் இலங்கையின் பொருளாதார மீளெழுச்சிக்கு பங்களிப்பதற்கும் எமது அசைக்கவியலாத அர்ப்பணிப்பிற்கான ஒரு சான்றாகும். CSE உடன் ஒரு பயனுள்ள மற்றும் செயல்விளைவுடைய கூட்டுமுயற்சியினை நாம் எதிர்நோக்குவதுடன், எதிர்வரும் வருடங்களில் பல்வேறு வெற்றிகரமான முன்னெடுப்புகளுக்கு இந்த இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது வழி வகுக்கும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.''

**<u>புகைப்படம்</u>**



*திருமதி. ருச்சேரா ஜயவர்தன, திருமதி. டிலானி பெரேரா, திருமதி, நிலூஷா ரணசிங்க, திரு. ரஜீவ பண்டாரநாயக்க மற்றும் திரு. நிரோஷன் விஜேசுந்தர*

---

**கொ.ப.ப. இனைப் பற்றி**

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (கொ.ப.ப.) இலங்கையிலுள்ள ஒரேயொரு பங்குச் சந்தையினை செயற்படுத்துவதுடன், கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்கள் ஒன்றுசேரக்கூடிய ஒரு வெளிப்படையான மற்றும் முறைமைப்படுத்தப்பட்ட சூழலினை வழங்குவதற்கு பொறுப்பாயுள்ளது. கொ.ப.ப. இலங்கையின் சட்டங்களின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். கொ.ப.ப., இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டுள்ளதுடன், 15 அங்கத்தவர்களையும், 13 வர்த்தக அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய ஒரு பரஸ்பரமான பரிவர்த்தனையாகும். அனைத்து அங்கத்தவர்களும், வர்த்தக அங்கத்தவர்களும் பங்குத்தரகர்களாக செயலாற்றுவதற்காக இ.பி.ப.ஆ. இனால் உரிமமளிக்கப்பட்டுள்ளார்கள். மேலதிகத் தகவல்களுக்கு தயவுசெய்து www.cse.lk. இற்கு விஜயம் செய்யவும்.

மேலதிகத் தகவல்களுக்கு:


**நிரோஷன் விஜேசுந்தர**
**சந்தைப்படுத்தலின் தலைமை**
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
4ஆவது மாடி, மேற்கு தொகுதி,
உலக வர்த்தக மையம், எச்சிலன் சதுக்கம்,
கொழும்பு 01.
இலங்கை.
நேரடி + 94 112356510
மொபைல் + 94 777 819999
தொலைநகல் + 94 112445279